...opular Penny Series — 30

197

# 1001 அபூர்வ
# தமிழ்ப் பழமொழிகள்

பாரத நாட்டின் பண்டைக் காலத்திய பழமொழிகளில் ஆயிரத்தொன்றை ஆராய்ந்தெடுத்து அகரவரிசைப்படுத்தி இதில் வெளியிட்டிருக்கின்றோம்

OFFICE OF THE REGISTRAR OF BO...
30 JAN 1943
MADRAS

... எஸ். ராமுலு கம்பெனி
...ல்டிங்ஸ் : : எஸ்பிளனேட், மதருஸ்

O-,82
N43
172831

...rved

# நேரு ஹிந்தி முதல் பாடம், இரண்டாம் பாடம்

தமிழ் மூலமாய் ஹிந்தி உயிர் எழுத்துக்கள், மெய் எழுத்துக்கள், கூட்டு எழுத்துக்கள், சிறு வார்த்தைகள், எண்கள் முதலியவை சுலபமாய்க் கற்றுக் கொள்ளலாம். 64-பக்கங்கள் கொண்டது; விலை அணா 3. ஒரு காபி அனுப்ப நான்கு அணா இந்தியா தபால் ஸ்டாம்பு அனுப்பிவைக்கக் கோருகின்றோம். [நேரு ஹிந்தி ஆசான் வாங்குபவர்கள் ஷை புத்தகத்தை வாங்க வேண்டியதில்லை.]

**Nehru Hindi—Telugu 1 & 2 Reader. Price Three Annas**

---

# நேரு ஹிந்தி ஆசான்

அல்லது

## ஹிந்துஸ்தானி ஸ்வபோதினி

[துரைத்தனத்தார் அங்கீகரித்தது].

தமிழ் படிக்கத்தெரிந்த ஒவ்வொருவரும் சிறுவர் முதல் பெரியோர் ஈறாக தங்கள் ஓய்வுக்காலங்களில் தினந்தோறும் அரைமணி நேரம் இப்புத்தகத்தை அப்யசித்துவந்தார்களானால், உபாத்தியாயர் உதவியின்றித் தமிழைக்கொண்டு நாலே வாரத்தில் நல்ல ஹிந்தி பாஷையைச் சப்ததோஷ மில்லாமல் சுலபமாய்ப் பேசவும், படிக்கவும், எழுதவும் கற்றுக்கொள்ளக் கூடிய அரிய பெரிய புத்தகம். இப்புத்தகம் ஒன்று கையிலிருந்து விட்டால், பாஷைக் கஷ்டம் என்பதுசிறிதுமின்றி உலகத்தையேசுற்றிவந்துவிடலாம். ஹிந்திப் படங்களையே பெரிதும் விரும்பும் சினிமா நேயர்களுக்கு இது மிகவும்இன்றியமையாதபுத்தகமாகும். வியாபாரிகளுக்கு இப்புத்தகம் ஒரு தோன்றாத் துணைவனாகும். இப்புத்தகம் 22-பெரிய அத்தியாயங்களாய் வகுக்கப்பட்டிருக்கின்றன. தமிழர் யாவரும் இப் புத்தகத்தை வாங்கி வாசித்து பெருமையும் பயனும் அடைய வேண்டி இதற்கு மிகக் குறைவாக விலை வைத்திருக்கின்றோம்.

## விலை அணா 0—12—0

அணா 0—14—0-க்கு மணியார்டர் அல்லது இந்தியா தபால் ஸ்டாம்பு அனுப்பினால் ஒருகாபி அனுப்பிவைக்கப்படும். வி.பி.யில் அனுப்புவதானால் தபாற் செலவு 0—7—0 அணா அதிகமாகும். பர்மா, சிலோன், சிங்கப்பூர் ஸ்டாம்புகள் பெற்றுக்கொள்வதில்லை.

**எம். எஸ். ராமுலு கம்பெனி**

**286, அப்பா பில்டிங்ஸ் :: எஸ்பிளனேட், மதராஸ்**

OFFICE ... 30 JAN 1943 MADRAS

ஸ்ரீ

# :: :: 1001 அபூர்வ :: ::

# தமிழ்ப் பழமொழிகள்

1. அகதிக்குத் தெய்வமே துணை.
2. அகத்தின் அழகு முகத்தில் தெரியும். [பகை.
3. அகல இருந்தால் நிகள உறவு, கிட்ட இருந்தால் முட்டப்
4. அகழிலே விழுந்த முதலைக்கு அதுவே வைகுண்டம்.
5. அகோர தபசி விபரீத சோரன்.
6. அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை.
7. அசைந்து தின்கிறது மாடு, அசையாமல் தின்கிறது வீடு.
8. அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்.
9. அச்சில்லாமல் தேர் ஓடுமா?
10. அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?
11. அடங்காத பாம்புக்கு ராஜா மூங்கில் தடி.
12. அடாது செய்பவர் படாது படுவர்.
13. அடி உதவுகிறதுபோல் அண்ணன் தம்பி உதவுவார்களா?
14. அடித்து வளர்க்காத பிள்ளையும் முறுக்கி வளர்க்காத மீசையும் செவ்வையாகா.
15. அடி நாக்கிலே நஞ்சும் நுனி நாக்கிலே அமிர்தமுமா?
16. அடிமேல் அடி அடித்தால், அம்மியும் நகரும்.
17. அடியாத மாடு படியாது. [லோகம்.
18. அடுப்பங்கரையே கைலாசம், ஆம்படையானே சொர்க்க
19. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
20. அதிகாரி வீட்டுக் கோழிமுட்டை குடியானவன் வீட்டு அம்மியை உடைத்ததாம்.
21. அதிர்ஷ்டமும் ஐசுவரியமும் ஒருவர் பங்கல்ல.
22. அத்திப் பழத்தைப் பிட்டுப் பார்த்தால் அத்தனையும் புழு.
23. அந்தி மழை அழுதாலும் விடாது.
24. அப்பன் அருமை அப்பன் மாண்டால் தெரியும்.
25. அப்பா என்றால் உச்சி குளிருமா?

17283



26. அமாவாசைப் பருக்கை என்றைக்கும் அகப்படுமோ? [காரன்.
27. அம்மண தேசத்திலே கோமணங் கட்டினவன் பைத்தியக்
28. அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்டது போல.
29. அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்.
30. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி.
31. அரிசி ஆழாக்கானாலும் அடுப்புக்கட்டி மூன்று வேண்டும்.
32. அரைக் காசுக்குப் போன மானம் ஆயிரம் கொடுத்தாலும்-
33. அரைக்குடம் ததும்பும் நிறைகுடம் ததும்பாது. [வாராது.
34. அரைப் பணம் கொடுத்து அழச்சொல்லி ஒரு பணம் கொடு த்து ஓயச் சொல்லுவானேன்?
35. அருமையற்ற வீட்டில் எருமையும் குடியிருக்காது. [கமில்லை.
36. அருளில்லார்க்குஅவ்வுலகமில்லை,பொருளில்லார்க்கு இவ்வுல
37. அலை எப்பொழுது ஒழியும், தலை எப்பொழுது முழுகுகிறது?
38. அல்லல் ஒருகாலம் செல்வம் ஒருகாலம்.
39. அவசாரிக்கு ஆணையில்லை, திருடிக்குத் தெய்வமில்லை.
40. அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிக்கிறாள்.
41. அவள் பேர் கூந்தலழகி, அவள் தலை மொட்டை.
42. அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது.
43. அழகிருந்தென்ன, அதிர்ஷ்டம் இருக்கவேணும்.
44. அழகுக்கு அணிந்த ஆபரணம் ஆபத்துக்கு உதவும்.
45. அழிந்த கொல்லையில் குதிரை மேய்ந்தாலென்ன, கழுதை-
46. அழுத பிள்ளை பால் குடிக்கும். [மேய்ந்தா லென்ன?
47. அழுதாலும் பிள்ளை அவளே பெறவேண்டும்.
48. அழையா வீட்டிற்கு நுழையாச் சம்பந்தி. [மில்லை.
49. அளகாபுரி கொள்ளையானாலும் அதிர்ஷ்ட ஈனனுக்கு ஒன்று
50. அளகேச னானாலும் அளவறிந்து செலவு செய்யவேண்டும்.
51. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.
52. அள்ளாது குறையாது, சொல்லாது பிறவாது.
53. அள்ளிக் கொடுத்தால் சும்மா, அளந்து கொடுத்தால் கடன்.
54. அறக்கப்பறக்கப் பாடுபட்டாலும் படுக்கப் பாயில்லை.
55. அறப்படித்தவன் அங்காடி போனால், விற்கவும் மாட்டான் கொள்ளவும் மாட்டான்.
56. அறிஞர்க்கு அழகு அகத்துணர்ந்து அறிதல். [வேண்டும்.
57. அறிந்தறிந்து செய்கிற பாவத்தை அழுதழுது தொலைக்க
58. அறுபத்துநாலடிக் கம்பத்திலேறி ஆடினாலும், அடியிலிறங்கித் தான் தியாகம் வாங்கவேண்டும்.

0-182 1143

59. அறுப்புக் காலத்தில் எலிக்கு ஐந்து பெண்சாதி.
60. அறையில் ஆடியல்லவோ அம்பலத்தில் ஆடவேண்டும்?
61. அற்ப சகவாசம் பிராண சங்கடம். [பிடிப்பான்.
62. அற்பனுக்குப் பவிஷு வந்தால், அர்த்த ராத்தியில் குடை
63. அன்பற்ற மாமியாருக்குக் கால் பட்டாற் குற்றம் கை பட்-
64. அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறி. [டாற் குற்றம்.
65. அன்பு இருந்தால் ஆகாததும் ஆகும்.
66. அன்று எழுதினவன் அழித்து எழுதுவானா? [மாம்.
67. அன்று குடிக்கத் தண்ணீரில்லை ஆனைமேல் அம்பாரி வேணு
68. அன்னப் பாலுக்குச் சிங்கி யடித்தவன் ஆவின் பாலுக்குச் சர்க்கரை தேடுகிறான். [போல.
69. அன்ன நடை நடக்கப்போய்த் தன் நடையும் கெட்டாற்
70. அன்னம் இட்டவர் வீட்டில் கன்னம் இடலாமா?
71. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
72. ஆகுங் காய் பிஞ்சிலே தெரியும்.
73. ஆகுங் காலம் ஆகும், போகுங் காலம் போகும்.
74. ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்கவேண்டும். [சாவான்.
75. ஆக்கமாட்டாத அழுகல் நாரிக்குத் தேடமாட்டாத திருட்டுச்
76. ஆக்க வேண்டாம் அரிக்க வேண்டாம் பெண்ணே, என் அருகில் இருந்தால் போதுமடி கண்ணே.
77. ஆசை அவள் மேலே, ஆதரவு பாய் மேலே.
78. ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள்.
79. ஆசை இருக்கிறது தாசில் பண்ண, அதிர்ஷ்டம் இருக்கிறது-
80. ஆசை வெட்கம் அறியாது. [கழுதை மேய்க்க.
81. ஆடமாட்டாத தேவடியாள் கூடம் கோணல் என்றாளாம்.
82. ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக் கறக்கவேண்டும், பாடிக் கறக்கிற மாட்டைப் பாடிக் கறக்கவேண்டும். [கதி?
83. ஆடிக்காற்றிலே அம்மி பறக்கச்சே இலவம் பஞ்சுக்கு எங்கே
84. ஆடிய காலும் பாடிய நாவும் சும்மாவிரா.
85. ஆடு கொடாத இடையன் ஆவைக் கொடுப்பானா?
86. ஆடு கொழுக்கிறதெல்லாம் இடையனுக்கு இலாபம்.
87. ஆடு நனைகிறதென்று கோனாய் குந்திக்கொண்டு அழுமா?
88. ஆடை இல்லாதவன் அரை மனிதன்.
89. ஆட்டுக்கு வால் அளவறுத்து வைத்திருக்கிறது.
90. ஆண்டி மகன் ஆண்டியானால் நேரமறிந்து சங்கு ஊதுவான்.
91. ஆண்டி யெப்போ சாவான், மடம் எப்போ ஒழியும்?

92. ஆண்டியைக் கண்டால் லிங்கன் தாதனைக் கண்டால் ரங்கன்.
93. ஆதாய மில்லாத செட்டி ஆற்றோடே போவானா?
94. ஆதீனக்காரனுக்குச் சாதனம் வேண்டுமா?
95. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு.
96. ஆபத்துக்குப் பாவமில்லை.
97. ஆயிரங்கலம் நெல்லுக்கு ஓர் அந்துப் பூச்சி போதும்.
98. ஆயிரத்திலே பிறந்து ஐந்நூற்றிலே கால் நீட்டினது போல.
99. ஆயிரம் காக்கைக்கு ஒரு கல்.
100. ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்.
101. ஆயிரம் பொன்பெற்ற குதிரைக்கு அரைப்பணத்துச் சவுக்கு.
102. ஆய்ந்து பாராதான் காரியம், தான் சாந்துயரந் தரும்.
103. ஆராத்தாள் செத்ததும் பொழுது விடிந்தால் தெரியும்.
104. ஆரால் கேடு, வாயால் கேடு.
105. ஆரியக் கூத்தாடினாலும் காரியத்திற் கண்ணாயிரு.
106. ஆரும் இல்லாத ஊரிலே அசுவமேத யாகம் செய்தானாம்.
107. ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி, நாலும் (நாலடியார்) இரண்டும் (குறள்) சொல்லுக்கு உறுதி.
108. ஆலை இல்லாத ஊரிலே இலுப்பைப்பூ சர்க்கரை.
109. ஆளனில்லாத மங்கைக்கு அழகு பாழ்.
110. ஆளுக்கு ஒரு குட்டுக் குட்டினால் அடியேன் தலை மொட்டை.
111. ஆறிலுஞ் சாவு நூறிலுஞ் சாவு.
112. ஆறின கஞ்சி பழங்கஞ்சி.
113. ஆறின புண்ணிலும் அசடு நிற்கும்.
114. ஆறு கடக்கிற வரையில் அண்ணன் தம்பி, ஆறு கடந்தால் நீ யார் நானார்.
115. ஆறு கெட நாணல் இடு, ஊரு கெட நூலை இடு.
116. ஆறு போவதே போக்கு, அரசன் சொல்வதே தீர்ப்பு.
117. ஆற்றிலே போகிற தண்ணீரை அப்பா குடி, அம்மா குடி.
118. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
119. ஆற்று மணலிலே தினம் புரண்டாலும் ஒட்டுகிறதுதான் ஒட்டும்.
120. ஆனைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒரு காலம்.
121. ஆனைக்கும் அடி சறுக்கும்.
122. ஆனை படுத்தால் ஆள்மட்டம்.
123. ஆனை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே.
124. ஆனை வேகம் அடங்கும் அங்குசத்தினால்.
125. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.
126. இஞ்சி இலாபம் மஞ்சளில்.

127. இடங் கொடுத்தால் மடம் பிடுங்குவான்.
128. இடாள், தொடாள், மனுஷர்மேல் செத்த பிராணன்.
129. இடித்தவள் புடைத்தவள் இங்கே இருக்க, எட்டிப் பார்த்த
வள் கொட்டிக்கொண்டு போனாளாம்.
130. இடுகிறவள் தன்னவளானால், அடிப்பந்தியி லிருந்தாலென்ன,
கடைப்பந்தியி லிருந்தாலென்ன ?
131. இடுவது பிக்ஷை, பெறுவது மோக்ஷம்.
132. இட்ட உறவு எட்டு நாளைக்கு, நக்கின உறவு நாலு நாளைக்கு.
133. இட்டதெல்லாங் கொள்ளும் பட்டி மகன் கப்பரை.
134. இட்டாருக்கு இட்ட பலன்.
135. இட்டார் பெரியோர், இடாதார் இழி குலத்தோர்.
136. இட்டுக் கெட்டார் எங்குமே இல்லை.
137. இமைக் குற்றம் கண்ணுக்குத் தெரியாது.
138. இரக்கப் போனாலும் சிறக்கப் போ. [நாய்க்குட்டி.
139. இரண்டு வீட்டிலுங் கலியாணம், இடையிலே ஒசத்ததாம்
140. இரப்பவனுக்கு வெண்சோறு பஞ்சமா ?
141. இரவல் சோறு பஞ்சம் தாங்குமா ?
142. இரவல் சீலையை நம்பி இடுப்புக் கந்தையை எறிந்தாளாம்.
143. இராகு திசையில் வாழ்ந்தவனும் இல்லை, இராச திசையிற்-
144. இராசன் எவ்வழி குடிகளும் அவ்வழி. [கெட்டவனுமில்லை.
145. இராசா மகள் ஆனாலும் கொண்டவனுக்குப் பெண்டுதான்.
146. இராமனைப் போல் இராசா இருந்தாள், அனுமானைப்போல்
சேவகனும் இருப்பான். [வையாய்ச் சிரைப்பான்.
147. இருக்கிறவன் செவ்வையாய் இருந்தால் சிரைக்கிறவன் செவ்
148. இருந்த கால் மூதேவி, நடந்த கால் சீதேவி.
149. இருந்தவன் எழுவதற்குள் நின்றவன் நெடுந்தூரம்.
150. இருந்தால் நவாப் சாயப் இல்லாவிட்டால் பக்கிரி சாயப்.
151. இருப்பது பொய், போவது மெய்.
152. இரும்பு பிடித்த கையும் சிரங்கு பிடித்த கையும் சும்மா
153. இருவரும் ஒத்தால் ஒருவருக்கும் பயமில்லை. [யிராது.
154. இருவர் நட்புக்கு ஒருவர் பொறுமை. [டுமா ?
155. இருளன் பிள்ளைக்கு எலி பிடிக்கக் கற்றுக்கொடுக்க வேண்
156. இலங்கணம் பரம ஔஷதம்.
157. இல்லற மல்லது நல்லற மன்று.
158. இல்லாத பிள்ளைக்கு இலுப்பைப் பூச் சர்க்கரை.
159. இல்லாது பிறவாது அள்ளாது குறையாது.

160. இழவுக்கு வந்தவள் தாலி யறுப்பாளா?
161. இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று.
162. இளங்கன்று பயம் அறியாது.
163. இளமையிற் சோம்பல் முதுமையில் வறுமை.
164. இளைத்தவன் பெண்டாட்டி எல்லாருக்கும் மைத்துனி.
165. இளைத்தவன் தலையில் ஈரும் பேனும்.
166. இறுகினால் களி, இளகினால் கூழ். [செல்வம்.
167. இறைக்க ஊறும் மணற்கேணி, ஈயப் பெருகும் பெருஞ்
168. இறைத்த கிணறு ஊறும், இறையாத கிணறு நாறும்.
169. இனம் இனத்தைக் காக்கும் வேலி பயிரைக் காக்கும்.
170. இனம் இனத்தோடே வெள்ளாடு தன்னோடே.
171. இன்று இருப்பவர் நாளைக்கு இல்லை.
172. இன்றைக்கு இலை அறுத்தவன் நாளைக்குக் குலை அறுப்பான்.
173. இன்றைக்கு என்பதும் நாளைக்கு என்பதும் இல்லை என்பதற்கு அடையாளம்.
174. ஈக்கு விடம் தலையில், தேளுக்கு விடம் கொடுக்கில்.
175. ஈட்டி எட்டு முழம் பாயும், பணம் பாதாளம் மட்டும் பாயும்.
176. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
177. ஈர நாவிற்கு எலும்பில்லை.
178. ஈரைப் பேனாக்கிப், பேனைப் பெருமாள் ஆக்குகிறது.
179. உகிர்ச் சுற்றின்மேல் அம்மி விழுந்ததுபோல்.
180. உடல் உள்ள வரையில் கடல் கொள்ளாத கவலை. [கிறாயா?
181. உடல் மெச்சப் பால் குடிக்கிறாயா, ஊர் மெச்சப் பால் குடிக்
182. உடம்பு போனால் போகிறது, கை வந்தால் போதும்.
183. உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா.
184. உடைந்த சங்கு ஊது பரியுமா?
185. உடையவன் பாரா வேலை ஒரு முழங் கட்டை.
186. உட்கார்ந்தல்லவோ படுக்கவேண்டும். [வானு?
187. உட்கார்ந்தவனைக் கட்டமாட்டாதவன் ஓடுகிறவனைக் கட்டு
188. உண்ட இளைப்புத் தொண்டருக்கும் உண்டு.
189. உண்டதுதானே ஏப்பம் வரும்.
190. உண்டவன் உண்டு போக என் தலை பிண்டு போகிறதா?
191. உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா?
192. உழுகிற மாடானால் உள்ளூரில் விலை போகாதா?
193. உறவுதான் பயிரிலே கையை வையாதே.
194. உறவு போகாமல் கெட்டது, கடன் கேட்காமல் கெட்டது.

195. உற்றது சொன்னல் அற்றது பொருந்தும்.
196. உனக்கு ஒரு பேச்சு எனக்கு ஒரு மூச்சு.
197. ஊணுக்கு மூந்துவான் வேலைக்குப் பிந்துவான்.
198. ஊமைக்கு உளறுவாயன் உற்பாத பிண்டம். [கும்.
199. ஊமை ஊரைக் கெடுக்கும், பெருச்சாளி வீட்டைக் கெடுக்
200. ஊரார் உடைமைக்குப் பேயாய்ப் பறக்கிறுன். [வளரும்.
201. ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே
202. ஊருக்கொரு தேவடியாள் ஆருக்கென்று ஆடுவாள் ?
203. ஊரென்றிருந்தால் பறைச்சேரியும இருக்கும்.
204. ஊரைச் சொன்னலும் பேரைச் சொல்லாதே.
205. ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்.
206. ஊர் உண்டு பிச்சைக்கு, குளம் உண்டு தண்ணீருக்கு.
207. ஊர் வாயைமூட உலைமூடி இல்லை.
208. ஊழிக்காய்ச்சல் அதிகம் ஆனல் சூனியக்காரன் கொள்ளை.
209. ஊழி பெயரினும் ஊக்கமது கைவிடேல்.
210. எங்கும் மடமாய் இருக்கிறது, இருக்கத்தான் இடமில்லை.
211. எங்கே புகை உண்டோ அங்கே நெருப்பும் உண்டு. [பானு?
212. எச்சிற் கையால் காக்கை ஓட்டாதவன் பிச்சை கொடுப்
213. எடுக்கிறது பிச்சை ஏறுகிறது பல்லக்கு.
214. எடுத்துவிட்ட எருது எத்தனை நாள் உழைக்கும் ?
215. எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விட்டென்ன ?
216. எட்டி பழுத்தென்ன, ஈயாதார் வாழ்ந்தென்ன ?
217. எட்டிக்குப் பால் வார்த்து வளர்த்தாலும் தித்திப்பு
உண்டாகாது. [பணம்.
218. எட்டின மட்டும் வெட்டும் கத்தி, எட்டாத மட்டும் வெட்டும்
219. எட்டினல் குடுமியைப் பிடி, எட்டாவிட்டால் காலைப் பிடி.
220. எட்டு வருஷத்து எருமைக்கடா ஏரிக்குப் போக வழி-
221. என்சாண் உடம்பிற்கும் சிரசே பிரதானம். [தேடுமாம்.
222. எண்ணிச் செய்கிறவன் செட்டி, எண்ணுமற் செய்கிறவன்-
223. எதார்த்தவாதி வெகுஜன விரோதி [மட்டி.
224. எத்தனை புடம் இட்டாலும் இரும்பு பசும்பொன் ஆகுமா ?
225. எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம்.
226. எந்தப் புற்றிலே எந்தப் பாம்பு இருக்கிறதோ ?
227. எந்த வாக்குப் பொய்த்தாலும் சந்தை வாக்குப் பொய்யாது.
228. எய்கிறவன் எய்தால் அம்பு என்ன செய்யும் ?
229. எரிகிறதைப் பிடுங்கினல் கொதிக்கிறது அடங்கும்.

230. எரிகிற விளக்கானாலும் தூண்டுகோல் ஒன்று வேண்டும்.
231. எரிகிற வீட்டில் பிடுங்கினது இலாபம்.
232. எருது நோய் காக்கைக்குத் தெரியுமா ?
233. எருமை வாங்குமுன்னே நெய்விலை கூறுதே.
234. எலி வளையானாலும் தனி வளை வேண்டும்.
235. எலும்பு கடிக்கிற நாய் இரும்பைக் கடிக்குமா ?
236. எலும்பு கடிக்கிற நாய்க்குப் பருப்பு சோறு ஏன் ? [யில்லை.
237. எல்லாம் இருக்கிறது பெட்டியிலே, இலைக்கறி கடையச் சட்டி
238. எல்லாரும் பல்லக்கு ஏறினால் பல்லக்கைத் தூக்குகிறது யார்?
239. எழுதாக் கடனுக்கு அழுதால் தீருமா ?
240. எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான், படித்தவன் பாட்டைக் கெடுத்தான். [க்கும்.
241. எளியாரை வலியார் அடித்தால் வலியாரைத் தெய்வம் அடி
242. எள்ளு என்கிறதற்கு முன்னே எண்ணெய் கொண்டு வரு-
243. எள்ளுக்கு ஏழு உழவு, கொள்ளுக்கு ஓர் உழவு. [கிறான்.
244. எறும்பு ஊறக் கல்லுந் தேயும்.
245. எறும்புந் தன் கையால் எண் சாண்.
246. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு ஆகுமா ? [ண்டாடும்.
247. ஏர் உழுகிறவன் இளப்பமானால் எருது மச்சான் முறை கொ
248. ஏர் பிடித்தவன் என்ன செய்வான், பானை பிடித்தவள் பாக்
249. ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும். [கியம்.
250. ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்.
251. ஏழைப் பேச்சு அம்பலம் ஏறாது.
252. ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் நொண்டிக்குக் கோபம்.
253. ஏன வாயனைக் கண்டாளாம், ஏணிப் பந்தம் பிடித்தாளாம்.
254. ஐங்காயம் இட்டு அரைத்தாலும் தன் நாற்றம் போகாதாம் பேய்ச் சுரைக்காய்க்கு. [யாக்குவாள்.
255. ஐந்து மூன்று மடுக்கா யிருந்தால் அறியாப் பெண்ணுங் கறி
256. ஐயர் வருகிற வரையில் அமாவாசை நிற்குமா ?
257. ஒடிந்த கோலானாலும் ஊன்றுகோ லாகும்.
258. ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் போடு.
259. ஒதியமரம் தூணாமோ, ஒட்டாங் கிளிஞ்சல் காசாமோ ?
260. ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம், உள்ளே இருக்கு-
261. ஒரு காசு பேணின் இரு காசு தேறும். [மாம் ஈரும் பேனும்.
262. ஒரு குடம் பாலுக்கு ஒரு துளிப் பிரை.

263. ஒரு கை தட்டினால் ஓசை எழும்புமா ?
264. ஒரு கை முழம் போடுமா ?
265. ஒரு நாள் கூத்துக்கு மீசையைச் சிரைக்கவா ?
266. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
267. ஒரு பிள்ளையும் பிள்ளையா, ஒரு மரமும் தோப்பா ?
268. ஒருவர் அறிந்தால் இரகசியம், இருவர் அறிந்தால் அம்பலம்.
269. ஒவ்வாக் கூட்டிலும் தனிமை அழகு.
270. ஒளிக்கப் போயும் தலையாரி வீட்டிலா ?
271. ஓடவு மாட்டான் பிடிக்கவு மாட்டான், ஓயாமல் பேசுவான்.
272. ஓடிப்போனவனுக்கு ஒன்பதா மிடத்திலே இராசா, அகப்பட்டவனுக்கு அட்டமத்திலே சனி.
273. ஓடுகிற ஆறு ஓடிக்கொண்டே இருக்குமா ?
274. ஓட்டைச் சட்டியானாலும் கொழுக்கட்டை வெந்தாற் சரி.
275. ஓணான் வேலிக்கிழுக்கிறது, தவளை தண்ணீருக் கிழுக்கிறது.
276. ஓர் ஊர்ப் பேச்சு ஓர் ஊருக்கு ஏச்சு.
277. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.
278. ஔவை சொல்லுக்கு அச்சம் இல்லை.
279. கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னம் ஆகுமா ?
280. கடந்து போனது கரணம் போட்டாலும் வராது.
281. கடலுக்குக் கரை போடுவார் உண்டா ? [காலில்லை.
282. கடலைத் தாண்ட ஆசையுண்டு, கால்வாயைத் தாண்டக்
283. கடல் கொதித்தால் விளாவ நீர் எங்கே ?
284. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.
285. கடன் இல்லாத கஞ்சி கால் வயிறு போதும்.
286. கடன் வாங்கிக் கடன் கொடுத்தவனும் கெட்டான் ; மரம் ஏறிக் கைவிட்டவனும் கெட்டான்.
287. கடன் வாங்கியும் பட்டினி, கல்யாணம் பண்ணியும் சந்நியாசி.
288. கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா ?
289. கடுங்காற்று மழை கூட்டும், கடுஞ்சிநேகம் பகை காட்டும்.
290. கடையில் தேங்காயை எடுத்து வழியில் பிள்ளையாருக்கு உடைத்தது போல. [மாள்.
291. கட்டக் கரியமணி யில்லாமற் போனாலும் பேர் பொன்னம்
292. கட்டினவனுக்கு ஒரு வீடானால் கட்டாதவனுக்கு பல வீடு.
293. கட்டின வீட்டுக்கு எட்டு வக்கணை.
294. கட்டோடே போனால் கனத்தோடே வரலாம்.
295. கட்டபாறையை விழுங்கிவிட்டுச் சுக்குநீர் குடித்தால் தீருமா?

296. கணக்கன் கணக்கறிவான், தன் கணக்கைத் தான் அறியான்.
297. கணக்கைப் பார்த்தால் பிணக்கு வரும்.
298. கண் குருடு ஆனாலும் நித்திரையில் குறையுமா?
299. கண் கெட்ட பிறகா சூரிய நமஸ்காரம் பண்ணுகிறது?
300. கண்டது கற்கப் பண்டிதனாவான். [தே.
301. கண்டது கேட்டது சொல்லாதே, காட்டு மரத்திலே நில்லா
302. கண்டதே காட்சி கொண்டதே கோலம்.
303. கண்டால் ஒரு பேச்சு காணவிட்டால் ஒரு பேச்சு.
304. கண்ணிலே குத்தின விரலைக் கண்டிப்பார் உண்டோ?
305. கண்ணிற் புண் வந்தால் கண்ணாடி பார்த்தல் ஆகாது.
306. கதி கெட்ட மாப்பிள்ளைக்கு எருமுட்டை பணியாரம்.
307. கதிரவன் சிலரைக் காயேன் என்குமோ?
308. கதைக்குக் காலில்லை, கொழுக்கட்டைக்குத் தலையில்லை.
309. கத்தரிக்காய் வாங்க பூசனிக்காய் கொசுரா? [குடி.
310. கந்தை ஆனாலும் கசக்கிக் கட்டு, கூழ் ஆனாலும் குளித்துக்
311. கபடன் சொல்லினும் கடிய சொல்லே நலம்.
312. கப்பற்காரன் வாழ்வு காற்று அடித்தால் போச்சு.
313. கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்.
314. கம்புக்குக் களைவெட்டினாற் போலும் இருக்கவேண்டும், தம்பிக்குப் பெண் கொண்டாற் போலும் இருக்கவேண்டும்.
315. கம்மாளன் நாய் சம்மட்டித் தொனிக்கு அஞ்சுமா?
316. கரணம் தப்பினால் மரணம்.
317. கரி விற்ற பணம் கறுப்பாய் இருக்குமா?
318. கரும்பு கசக்கிறது வாய்க் குற்றம்.
319. கரும்பு ருசி என்று வேரோடு பிடுங்கலாமா?
320. கரைப்பார் கரைத்தால் கல்லுங் கரையும்.
321. கலகத்திலே புகாதவன் நரகத்திலே போவான்.
322. கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்.
323. கல் கிணற்றுக்கு ஏற்ற இரும்புத் தோண்டி.
324. கல்லடிச் சித்தன் போனவழி காடுமேடெல்லாம் தவிடுபொடி.
325. கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமா?
326. கல்லைக் குத்துவானேன் கை நோகிறதென்று அழுவானேன்?
327. கல்வி கரையில கற்பவர் நாள் சில.
328. கவலை உடையார்க்குக் கண்ணுறக்கம் வராது.
329. கழுதைக்கு உபதேசம் காதிலே ஓதினாலும் அபயக்குரலே அன்றி அங்கொன்றுமில்லை.

330. கழுதைக்குத் தெரியுமா கரும்பு ருசி?
331. கழுதைக்கு வாழ்க்கைப்பட்டு உதைக்கு அஞ்சினால் தீருமா?
332. கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆயிற்று.
333. களை பிடுங்காப் பயிர் காற் பயிர். [திருடலாம்.
334. கள்ளனும் தோட்டக்காரனும் ஒன்று கூடினால் விடியுமட்டும்-
335. கள்ளனை நம்பினாலும் குள்ளனை நம்பலாகாது.
336. கள்ளன் மனையாளைக் களவுப் பொருளைக் காணும் குறிகேட்க
337. கள்ளிக்கு முள்வேலி இடுவானேன்? [லாமா?
338. கறந்த பாலும் எச்சில், பிறந்த பிள்ளையும் எச்சில்.
339. கறுப்பு நாய் வெள்ளை நாய் ஆகுமா?
340. கறையான் புற்றில் அரவம் குடி கொண்டது போல.
341. கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு.
342. கற்றோர்க்குச் சென்ற விட மெல்லாஞ் சிறப்பு.
343. கனத்தால் இனமாகும், பணத்தால் ஜனமாகும்.
344. கனவில் கண்ட பணம் செலவிற்கு உதவுமா?
345. கனிந்த பழம் தானே விழும்.
346. கன்னி இருக்கக் காளை மணம் ஏறலாமா?
347. காகம்வலமானால் ஆயுசு விருத்தியாகும்.[கொண்டழுவாளாம்.
348. காக்காய் கற் என்றால் கணவனை அப்பா என்று கட்டிக்-
349. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.
350. காக்கையின் கழுத்தில் பணங்காயைக் கட்டினது போல.
351. காசுக்கு ஒரு குதிரையும் வேண்டும், காற்றைப்போல் பறக்க
வும் வேண்டும்.
352. காசுக்கு ஒரு புடவை விற்றாலும் நாயின் சூத்து அம்மணம்.
353. காசுக்குப் போன மானம் கோடி கொடுத்தாலும் வாராது.
354. காடு காத்தவனும் கச்சேரி காத்தவனும் பலன் அடைவான்.
355. காடு வா வா என்கிறது வீடு போ போ என்கிறது.
356. காட்டில் எறித்த நிலவும் கானலிற் பெய்த மழையும் வீண்.
357. காட்டு வாழை வந்தால் வீட்டு வாழ்வு போகும்.
358. காட்டை வெட்டிச் சாய்த்தவனுக்குக் கம்பு பிடுங்கப் பயமா?
359. காண ஒருதரம் கும்பிட ஒரு தரமா?
360. காணி ஆசை கோணி கேடு.
361. காதற்ற ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே.
362 காது காது என்றால் செவிடு செவிடு என்றான். [போனான்.
363. காத்திருந்தவன் பெண்டாட்டியைநேற்று வந்தவன் கொண்டு
364. காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளாம்.

365. காய் பாரத்தைக் கொடி தாங்காதா?
366. காய்ச்சலும் கழிச்சலும் சேர்ந்து விட்டால் நம்பப்படாது.
367. காய்ந்த மரம் கல்லடி படும்.
368. காய்ந்தும் கெடுத்தது பெய்தும் கெடுத்தது.
369. காராம் பசுவுக்குப் புல்லுமாம், நந்தவனத்துக்குக் களையுமாம்.
370. காரியமாகும் வரையில் கழுதையையும் காலைப்பிடி.
371. காரியம் பெரிதோ வீரியம் பெரிதோ? [கொடையும் இல்லை.
372. கார்த்திகைக்குப் பின் மழையும் இல்லை, கர்ணனுக்குப் பின்
373. காலமே எழுந்திருந்து காக்கை பார்க்கிறது ஆகாது.
374. காலம்போம் வார்த்தை நிற்கும், கப்பல்போம் துறை நிற்கும்.
375. காலளவே ஆகுமாம் கப்பலின் ஓட்டம், நூலளவே ஆகுமாம் நுண்சீலை.
376. காலுக்குத் தக்க செருப்பும், கூலிக்குத் தக்க உழைப்பும்.
377. காலைச் சுற்றின பாம்பு கடியாமல் விடாது.
378. கால்வாயைத் தாண்டாதவன் கடலைத் தாண்டுவானு?
379. காவடிப் பாரம் சுமக்கிறவனுக்குத் தெரியும்.
380. காளை போன வழியே, கயிறு போகும்.
381. காற்றில்லாமல் தூசி பறக்குமா?
382. காற்று உள்ள போதே தூற்றிக்கொள்.
383. காற்றுக்கு எதிரிலே துப்பினுல் முகத்தில் விழும்.
384. கிட்ட வா நாயே என்றுல் மூஞ்சியை நக்குகிறது.
385. கிட்டாதாயின் வெட்டென மற.
386. கிணறு வெட்டித் தாகம் தீர்க்கலாமா?
387. கிணற்றின் ஆழமும் கயிற்றின் நீளமும் பார்க்கவேண்டும்.
388. கிணற்றுக்குத் தப்பித் தீயிலே பாய்ந்தான்.
389. கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் என்?
390. கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்.
391. கீரைத் தண்டு பிடுங்க ஏலப்பாட்டு ஏன்?
392. குங்குமம் சுமந்த கழுதை பரிமளம் அறியுமா?
393. குசவனுக்கு ஆறுமாதம் தடிகாரனுக்கு அரை நாழி. [போல
394. குஞ்சிரிப்புக்கு மருந்து சாப்பிட உள்ள சிரிப்பும் போனுற்
395. குடல் காய்ந்தால் குதிரை வைக்கோல் தின்னும்.
396. குடியிருக்க வந்தாயோ கொள்ளிவைக்க வந்தாயோ?
397. குடி இருந்து பார், கூட்டுப் பயிர் இட்டுப் பார்.
398. குடிக்கிறது கூழ், கொப்பளிக்கிறது பன்னீர்.
399. குடிவைத்த வீட்டிற் கொள்ளி வைக்கலாமா?